1989 மே 2]

தேவையான நவீன கருவிகள் இல்லாத நிலையில் இன்றைக்கு பல இடங்கள் இருக்கின்றன ; அவைகளும் நவீனப்படுத்தப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : : தீயணைப்பு நிலையங்களில் இருக்கின்ற குறைபாடுகளைத் தீர்க்க உடனடியாகத் தேவையானவற்றை அரசு அந்தத் துறையின் மூலமாகச் செய்யும். தொடர்ந்து ஒரு நீண்டகாலத் திட்டமாக அவைகளைச் செய்வதற்காகத்தான் இரண்டாவது போலீஸ் கமிஷன் இப்போது அமைக்கப்படுகிறது. அதனுடைய பரிந்துரைகளின் படி இந்தக் காரியங்கள் நடைபெறும்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தீயணைப்பு நிலையங்களிலிருந்து புறப்படுகிற வாகனங்கள் தீ பிடிக்கின்ற இடத்திற்கு உடனடியாகப் போய் சேரமுடியாமல் இரயில்வே கேட் போன்றவைகள் தடுப்பாக இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில், கொருக்குப் பேட்டைப் பகுதியில் சமீபத்தில் தீ விபத்து ஏற்பட்டபோது அந்தத் தொல்லை ஏற்பட்டது. எனவே இரயில்வே கேட்டுக்கு அந்தப் புறம் ஒரு தீயணைப்பு வண்டி எப்போதும் நிறுத்தி வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல அவைகளை எல்லாம் போலீஸ் கமிஷன் ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 171 மற்றும் 172 மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 9-10)

குளச்சல்-மூசைமன் காலனி இணைப்புப் பால வேலை.

173—(*வினா எண். 300) திரு. ஆ. பாலையா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளச்சல்-சைமன் காலனி இணைப்புப் பால வேலைய முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பால வேலையை விரைவில் முடிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.